Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இலவச
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் செவ்வாய்க்கிழமை, செப்டம்பர் 07, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 55

## தடுப்பூசி போடாத மாணவர்கள், ஆசிரியர்கள் 12-ந் தேதி நடைபெற உள்ள சிறப்பு முகாம்களில் போட்டுக்கொள்ள வேண்டும் கேரள எல்லைகளில் போக்குவரத்து தடை செய்யப்பட வேண்டிய அவசியம் இல்லை - அமைச்சர் மா.சுப்பிரமணியன்



சென்னை, செப் 07 2021: சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள மீனாட்சி என்ஜினீயரிங் கல்லூரியில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாம் நேற்று நடந்தது. இதனை சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பார்வையிட்டார்.

பள்ளி, கல்லூரிகள் கடந்த 1-ந் தேதி தொடங்கப்பட்டதை தொடர்ந்து கல்லூரி மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு தடுப்பூசி போடும் பணி நடந்து வருகிறது.

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. சென்னையில் 112 கல்லூரிகளில் தடுப்பூசி முகாம்கள் நடந்து வருகின்றன. தமிழகம் முழுவதும் எல்லா கல்லூரிகளிலும் இந்த பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மாணவர்கள், பேராசிரியர்கள், களப்பணியாளர்கள், ஊழியர்கள் அனைவரும் இந்த முகாமை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கல்லூரியில் உள்ள அனைத்து மாணவர்களும் தடுப்பூசி போடுகிறார்களா என்பதை நிர்வாகம் ஆய்வு செய்கிறது. இது முன்மாதிரியான நடவடிக்கை. வருகிற 12-ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) தமிழகம் முழுவதும் தடுப்பூசி நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் 10 ஆயிரம் முகாம்கள் மூலம் 20 லட்சம் பேருக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கேரளா எல்லையை ஒட்டியுள்ள 9 மாவட்டங்களில் கூடுதலான முகாம்கள் நடத்தி பரிசோதனையை தீவிரப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காலையில் இருந்து இரவு வரை நடைபெறும் இந்த முகாம்களை நான் நேரில் சென்று பார்வையிடுகிறேன்.

ஆசிரியர்கள் தேர்தல் பணியிலும், பேரிடர் காலத்திலும் கல்விப்பணியை கடந்து பணியாற்றி வருகிறார்கள். அந்த வகையில் தடுப்பூசி போடும் பணியிலும் அவர்கள் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

இதுவரையில் தடுப்பூசி போடாத மாணவர்கள், ஆசிரியர்கள் இருந்தால் 12-ந் தேதி நடைபெற உள்ள சிறப்பு முகாம்களில் போட்டுக்கொள்ள முன்வர வேண்டும்.

தமிழகத்திற்கு நேற்று ஒரே நாளில் 19 லட்சத்து 22 ஆயிரம் தடுப்பூசிகள் வந்துள்ளன. தமிழகத்தில் உள்ள 9 மாவட்டங்களுக்கு 100 சதவீதம் தடுப்பூசி வேண்டும் என்று வலியுறுத்தினோம். அதன் அடிப்படையில் தற்போது அதிகளவு தடுப்பூசிகள் வருகின்றன.

30 லட்சத்து 40 ஆயிரம் தடுப்பூசிகள் தற்போது இருப்பு உள்ளன. தினமும் 5 லட்சம் பேருக்கு தடுப்பூசி போட முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னை மாநகராட்சியில் 42 லட்சத்து 45 ஆயிரம் பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

அகில இந்திய அளவில் சென்னை மாநகராட்சி இதில் முதல் இடம் பிடித்துள்ளது. முதல் தவணையை 29 லட்சம் பேரும், 2-வது தவணையை 13 லட்சத்து 42 ஆயிரம் பேரும் செலுத்தி உள்ளனர்.

ஆசிரியர்கள் 7 ஆயிரம் பேர், மாற்றுத்திறனாளிகள் 147 பேர், கல்லூரி மாணவர்கள் 3,069 பேர், கர்ப்பிணி தாய்மார்கள் 21 ஆயிரம் பேர், நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 1 லட்சத்து 72 ஆயிரம் பேர் சென்னையில் தடுப்பூசி போட்டுள்ளனர்.

பள்ளிகளில் தொற்று பரவாமல் தடுக்க கண்காணிக்கப்படுகிறது. தொற்று பரவிய பள்ளிகளில் மாதிரிகள் எடுக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதிகமாக பாதிப்பு உள்ள பகுதிகள் ஆய்வுக்குட்படுத்தப்படும்.

கேரளாவை ஒட்டிய எல்லைகளில் பரிசோதனைகள் முழுமையாக செய்யப்பட்டு வருகிறது. கேரள எல்லைகளில் போக்குவரத்து தடை செய்யப்பட வேண்டிய அவசியம் இல்லை. ரெயில், விமானம், தரை மார்க்கமாக தமிழகம் வருபவர்களுக்கு கட்டாயம் ஆர்.டி.பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்படும். அல்லது 2 தவணை தடுப்பூசி செலுத்தியதற்கான ஆவணத்தை காண்பிக்க வேண்டும். கேரளா எல்லை பகுதிகளில் நிபா காய்ச்சல் பரிசோதனை முகாம்களும் நடக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ.க்கள் ஜெ.கருணாநிதி, த.வேலு, துணை ஆணையர் சரண்யா அரி, பொது சுகாதாரத்துறை இயக்குனர் டாக்டர் செல்வ விநாயகம், கல்லூரி செயலாளர் கே.எஸ்.பபாய் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## "ஹலோ மிரர் மெட்ராஸ் செய்தி எதிரொலியாக" பவர் ஹவுஸ் அமைக்க வருஷநாடு ஊராட்சி இடம் கொடுக்க முன்வந்துள்ளது

வருஷநாடு செப்டம்பர் 07 2021: கடமலை மயிலை ஒன்றியம் வருஷநாடு பகுதியில் அடிக்கடி ஏற்படும் மின் தட்டுப்பாட்டை போக்க மின்சார வாரியம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சுமார் 3 ஏக்கரில் பவர்ஹவுஸ் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. என வருஷநாடு ஊராட்சி நிர்வாகம் கூறியுள்ளது. வருஷநாடு பகுதியை சுற்றியுள்ள அனைத்து கிராமங்களுக்கும் விவசாயம் மற்றும் தொழில் என அனைத்து தேவைகளுக்கும் தற்போது வரை கடமலைக்குண்டு பவர் ஹவுஸ் மூலம் குமணன் தொழு அருக வெளி வருஷநாடு என மூன்று பிரிவாக மின் விநியோகம் செய்யப்பட்டது. ஆனால் மக்கள் தொகை அதிகமான காரணத்தினாலும் மற்றும் மின்சார பயன்பாட்டின் தேவைகள் அதிகமாக உள்ளதாலும் விவசாயம் முதல் அனைத்து தேவைகளுக்கும் அடிப்படையாக இருப்பது மின்சாரம் இதனால் இப்பகுதியில் அடிக்கடி தொடர் மின்வெட்டால் அனைவரும் பாதிப்புக்கு உள்ளாகினர். இதை அறிந்த மின்வாரியம் இப்பகுதி மக்களின் நலன் கருதி பவர் ஹவுஸ் அமைத்தால் 100 ட்ரான்ஸ்பர் வரை மின்சாரத்தை பிரித்துக் கொடுக்கும் சக்தி வாய்ந்த அதிக திறன் கொண்ட பவர் ஹவுஸ் அமைக்க மற்றும் விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் தடையின்றி கிடைக்க வருஷநாடு ஊராட்சி நிர்வாகத்திடம் இடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்த செய்தி ஹலோ மிரர் மெட்ராஸ் தினசரி நாளிதழில் இடம்பெற்றது. இதனை தொடர்ந்து அனைத்து விவசாயிகளும் மற்றும் பெரியோர்களின் ஒத்துழைப்போடு இடம் கொடுக்க வருஷநாடு ஊராட்சி நிர்வாகம் முன்வந்துள்ளது. ஊராட்சி தலைவர் மணிமுத்து ஊராட்சி துணைத்தலைவர் பொன் கண்ணன் செயலாளர் முருகேசன் மற்றும் வார்டு உறுப்பினர்கள் கூறினார்கள். மேலும் இப்பகுதியில் பவர் ஹவுஸ் அமைத்தால் ஆயிரக்கணக்கான விவசாயிகளும் பல ஏக்கர் கணக்கான விளைநிலங்களும் செழிப்படையும் எனவும் மின்வாரிய தொழிலாளர்களின் சிரமமும் குறையும் எனவும் பவர் ஹவுஸ் அமைக்க முன்வந்த மின்சார வாரியத்திற்கு நன்றியையும் பொதுமக்கள் சார்பாக கேட்டுக் கொண்டனர்.

## மதுரை மாவட்டம் பள்ளிக் கல்வித்துறை சார்பில் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருதுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.எஸ்.அனீஷ் சேகர் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த 13 ஆசிரியர்களுக்கு வழங்கினார்



மதுரை, செப்டம்பர் 07 2021: மதுரை மாவட்டம் பள்ளிக் கல்வித்துறை சார்பில் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருதுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.எஸ்.அனீஷ் சேகர் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த 13 ஆசிரியர்களுக்கு வழங்கினார்.

மதுரை மாவட்டம் பள்ளிக் கல்வித்துறை சார்பில் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருதுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.எஸ்.அனீஷ் சேகர் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த 13 ஆசிரியர்களுக்கு வழங்கி தெரிவிக்கையில்:- பள்ளிக் கல்வித்துறை சார்பில், சிறந்த ஆசிரியர்களைப் போற்றும் வகையில் ஆசிரியர் தினத்தன்று டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருது வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் நாயகர்களான விருது பெற்ற 13 ஆசிரியர் பெருமக்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் மாணவனாக இருக்கும் போது நடைபெற்ற பல ஆசிரியர் தின விழாவில் ஆசிரியர் பெருமக்களுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ள ஞாபகம் வருகிறது. நான் மாவட்ட ஆட்சித் தலைவராக ஆசிரியர் தினத்தன்று சிறந்த ஆசிரியர் பெருமக்களுக்கு விருது வழங்குகின்ற நிலைக்கு என்னை உயர்த்தியவர்கள் எனது பள்ளிப் பருவ ஆசிரியர் பெருமக்கள்தான். பள்ளி ஆசிரியர்களை சிறப்பிக்கும் வகையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. பள்ளிப் படிப்பை சராசரி மாணவனாக பல சவால்களை எதிர்கொண்டே நிறைவு செய்தேன். என்னுடைய ஆசிரியர்கள் எனக்கு அளித்த உற்சாகம் மற்றும் உத்வேகத்தின் காரணமாக மாவட்ட ஆட்சித் தலைவர் என்ற நிலைக்கு உயர்ந்திருக்கிறேன். எனக்கு வழிகாட்டியாக விளங்கிய அனைத்து ஆசிரியர் பெருமக்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

படைப்பாற்றலில் மிகச் சிறந்தவர்களாக ஆசிரியர் பெருமக்கள் இருந்தால் மட்டுமே தினம் தினம் பல புதிய மாற்றங்களை கொண்டு வரும் எதிர்காலத்தை எதிர்கொள்ளும் வகையில் மாணவர்களை திறன் மிக்கவர்களாக உருவாக்க முடியும். தங்களது மாணவர்களின் தனித்திறனை வெளிக்கொணரும் அதே வேளையில் உண்மை. நேர்மை மற்றும் உழைப்பு ஆகிய உயர்ந்த பண்புகளையும் உருவாக்கும் வகையில் அனைத்து ஆசிரியர் பெருமக்களும் செயல்பட வேண்டும். அப்பொழுதுதான் மாணவர்கள் சமுதாயத்தில் சிறந்த மனிதர்களாக விளங்குவார்கள் எனத் தெரிவித்தார்.

நடைபெற்ற விழாவில் க.கர்ணன், மு.சுப்பிரமணியன், இரா.சே.முரளிதரன், வே.ம.விநாயகமூர்த்தி, த.சரவணன், சா.அருள்ராஜ், கோ.சிவக்குமார், ம.முருகேஸ்வரி, சு.லதா, சி.மகேஸ்வரி, மு.பரமேஸ்வரி, பி.ஜெயந்தி, க.மதிவதனன் ஆகிய ஆசிரியர்களுக்கு டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருதுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.எஸ்.அனீஷ் சேகர் வழங்கினார்கள்.

க.கர்ணன், மு.சுப்பிரமணியன், இரா.சே.முரளிதரன், த.சரவணன், ம.முருகேஸ்வரி, சு.லதா, சி.மகேஸ்வரி, மு.பரமேஸ்வரி, பி.ஜெயந்தி ஆகியோர் அரசு வழங்கிய சன்மானத் தொகை தலா ரூ.10,000-த்தை சேர்த்து ரூ.90,000-த்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் முதலமைச்சரின் கொரோன தடுப்பு நிவாரண நிதிக்கு வழங்கினார்கள்.

சா. அருள்ராஜ் அவர்கள் அரசு வழங்கிய சன்மானத் தொகை ரூ.10,000-த்தை கீழடி அகழ்வாராய்ச்சி பணிக்காக வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மதுரை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் அவர்கள், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் அவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் சூரியகலா அவர்கள், ஆகியோர் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## காஞ்சீபுரத்தில் ஊட்டச்சத்து விழிப்புணர்வு மாத விழாவை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்: மாவட்ட கலெக்டர் மா.ஆர்த்தி தொடங்கி வைத்தார்



காஞ்சீபுரம், செப். 07 2021: காஞ்சீபுரத்தில் ஊட்டச்சத்து விழிப்புணர்வு மாத விழாவை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மாவட்ட கலெக்டர் டாக்டர் மா.ஆர்த்தி தொடங்கி வைத்தார்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் ஊட்டச்சத்து விழிப்புணர்வு மாத விழாவை முன்னிட்டு மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் மாவட்ட கலெக்டர் டாக்டர் மா.ஆர்த்தி குத்துவிளக்கு ஏற்றி, அங்கு இருந்த கையெழுத்து இயக்க விழிப்புணர்வு பலகையில் கையெழுத்து இட்டு, விழிப்புணர்வு ஒட்டு வில்லைகளை மக்கள் அறியும் வண்ணம் ஒட்டி, விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்று ஊர்வலத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 01 முதல் 30 வரை ஊட்டச்சத்து விழிப்புணர்வு நிகழ்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக முதல் வாரத்தில் மரம் நடுதல், இரண்டாவது வாரத்தில் ஊட்டச்சத்திற்கான யோகா மற்றும் ஆயுஷ் நிகழ்ச்சிகள், மூன்றாவது வாரத்தில் அங்கன்வாடி பயனாளிகளுக்கு வட்டார அளவில் ஊட்டச்சத்து பொருட்கள் வழங்குதல் மற்றும் நான்காவது வாரத்தில் மிகவும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளை கண்டறிதல் மற்றும் சமுதாய தோட்டங்கள் அமைத்தல் போன்ற நிகழ்ச்சிகள் மற்ற துறைகளுடன் இணைந்து நடத்தப்பட உள்ளது.

ஊட்டச்சத்து மாத விழாவின் தொடக்க நிகழ்ச்சியாக காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலகம் வளாகத்தில் மாவட்ட கலெக்டரால் ஊட்டச்சத்து விழிப்புணர்வு குறித்த ஊர்வலம் துவங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சுமார் 100 அங்கன்வாடிப் பணியாளர்கள் கலந்து கொண்டு மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகம் முதல் காந்திரோடு நேரடி வரை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் க.சற்குணா, உணவு பாதுகாப்பு அலுவலர் அமுதா, அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

## தனியார் அரிசி அரவை ஆலை உரிமையாளர்களுடன் "ஒரு முறை திட்டத்திற்கான" கலந்தாய்வுக் கூட்டம்



காஞ்சீபுரம், செப். 07 2021: காஞ்சீபுரம் மாவட்ட தனியார் அரிசி அரவை ஆலை உரிமையாளர்களுடன் "ஒரு முறை திட்டத்திற்கான" கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட கலெக்டர் டாக்டர் மா.ஆர்த்தி தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் தரமான கொள்முதல் அரிசியை பொது விநியோக திட்டத்துக்கு வழங்க நடப்பு கொள்முதல் பருவம் 2020 - 2021 ல் கொள்முதல் செய்யப்பட்ட நெல்களை கழக அரிசி ஆலை மற்றும் கழகத்தில் அரவை முகவர்களாக செயல்பட்டு வரும் தனியார் அரவை ஆலைகள் மூலம் அரவை செய்து பொது விநியோகத் திட்டத்திற்கு தரமான அரிசியை வழங்கி வருகிறது.

இந்நிலையில் "ஒரு முறை திட்டத்தின்" கீழ் 15.09.2021 முதல் 15.11.2021 வரை அரவை செய்ய காஞ்சீபுரம் மாவட்ட தனியார் அரிசி அரவை ஆலை உரிமையாளர்களை அழைத்து மாவட்ட கலெக்டர் அலுவலக மக்கள் நல்லுறவு கூட்ட அரங்கில் மாவட்ட கலெக்டர் டாக்டர் மா.ஆர்த்தி தலைமையில் தனியார் அரவை முகவர்களின் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் சுமார் 40 அரவை ஆலை முகவர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட கலெக்டர் பேசுகையில்:

இத்திட்டத்தில் சேர விரும்பும் தனியார் அரவை ஆலைகள் கலர் சார்டெக்ஸ் உள்ளிட்ட நவீன வசதிகள் இருக்க வேண்டும் என்றும் பொது விநியோகத் திட்டத்திற்கு கழகத்தில் உள்ள நெல்லினை பெற்று தரமான அரிசியை பொது விநியோகத்திற்கு வழங்குமாறும் மற்றும் இத்திட்டத்தில் சேர்ந்து அரசுக்கு ஒத்துழைப்பும், தரமான அரிசியை அரவை செய்து பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் முதுநிலை மண்டல மேலாளர் முனைவர் வி.செந்தில்குமார் "ஒருமுறை திட்டத்தின்" பற்றிய விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல் ஆலோசனைகளை வழங்கினார்.

## ஜி. கே. வாசன் தலைமையில் விழுப்புரத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் (மூப்பனார்) விழுப்புரம், கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் நடைபெற இருக்கும் உள்ளாட்சி தேர்தல் சம்மந்தமாக ஆலோசனை கூட்டம்



விழுப்புரம், செப். 07 2021: விழுப்புரத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் (மூப்பனார்) விழுப்புரம், கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் நடைபெற இருக்கும் உள்ளாட்சி தேர்தல் சம்மந்தமாக மாவட்ட தலைவர்களின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்து கொண்டு ஜி. கே. வாசன் பேசினார். அதற்கு முன்னர் ஜி. கே. வாசன் செய்தியாளர்களிடம் கூறியதாவது, தமிழக அரசு அறிவித்துள்ள அறிவிப்புகள் அனைத்தும் உண்மையான மக்களுக்கு அடைய வேண்டும். வெள்ளை அறிக்கை அறிவித்து விட்டு மக்களுக்கு நிறைவேற்ற முடியாத நிலை உள்ளது என அரசு தட்டி கழிக்க கூடாது. தேர்தலில் அறிவித்த வாக்குறிதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து நிறைவேற்ற வேண்டும், மழை நீர் சேமிப்பு காரணமாக ஏரி, குளங்கள், கால்வாய்களை தூர்வாரி நீர் மேலாண்மையை திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். 100% வேளாண்மைக்கு முக்கியமளித்து டில்லியில் போராடும் விவசாயிகளை அழைத்து பேசி வேளாண்மை திட்டத்தில் உள்ள நிறைகளை கூறி அவர்களின் குறைகளை கேட்டு போராட்டத்திற்கு முடிவு செய்ய வேண்டும். இதனை வைத்து மாநில அரசு அரசியல் செய்வதை வன்மையாக கண்டிக்கிறோம். மூன்றாவது கொரோனா டெல்டா பிளஸ் அலை குழந்தைகளை தாக்கும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். எனவே மாநில அரசு இது குறித்து விரிவாக ஆய்வு செய்து பள்ளிகளை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மாணவர்கள் உயிர் முக்கியம். உள்ளாட்சி தேர்தலால் மக்களின் உடல் நலம் பாதிக்கும் என்றால் இதனை மாநில அரசு மற்றும் தேர்தல் ஆணையம் கவனமுடன் கையாளுதல் முக்கியம். பெட்ரோல், டீசல் விலை ஏற்றம் என்பது சர்வதேச அளவில் உள்ளது. இதனடிப்படையில் தான் இந்திய அரசு விலை நிர்ணயம் செய்து வருகிறது. விலை குறையும் போது இங்கும் குறையும். கள்ளக்குறிச்சி தஞ்சாவூர் சாலை அமைத்தால் விபத்துகள் குறையும். த.மா.கா., அ.தி.மு.க., மற்றும் பி.ஜெ.பி. அரசை ஆதரிக்கிறது. த.மா.கா. மூன்றாவது அரசியல் அணி என்பது இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# மகளிர்களுக்கான இலவச பஸ் பள்ளி மாணவர்கள் சிரமம்



**வருஷநாடு, செப்டம்பர் 07 2021: வருஷநாடு பகுதியில் இருந்து தங்கம்மாள்புரம் மயிலாடும்பாறை கடமலைக்குண்டு ஆகிய பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு மாணவர்கள் சென்று வருவது வழக்கம் தற்போது மகளிருக்கான இலவச பேருந்து இயக்கப்படுவதால் பெண்கள் காத்திருந்து அந்த பேருந்தில் இலவசப் பயணத்தை தொடர்கின்றனர். கூட்டம் அதிகமாக இருப்பதால் பள்ளி மாணவர்கள் பேருந்தில் ஏற முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. பள்ளி மாணவர்களுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நேரத்தில் இயக்கிய அரசு பேருந்து நேரம் மாற்றி அமைத்துக் கொடுத்துள்ளதால் இலவச பேருந்து நாட வேண்டிய சூழல் உள்ளது. இதனால் பள்ளி மாணவர்கள் வந்து செல்வது மிகவும் சிரமப்படுகின்றனர் பள்ளி மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் பேருந்தில் ஏற முடியாத சூழ்நிலை நாளும் தனியார் பேருந்தில் கட்டணம் செலுத்தி பயின்று வருகின்ற நிலை உள்ளது. எனவே பள்ளி மாணவர்கள் சென்று வரும் நேரத்தில் ஒரு பேருந்து இயக்க வேண்டும். எனவும் பள்ளி குழந்தைகளின் பெற்றோர்களும் ஆசிரியர்களும் கேட்டுக் கொள்கின்றனர். மேலும் சமூக ஆர்வலர் பந்தல் சுரேஷிடம் கேட்டபோது இலவச பயணம் செய்யும் மகளிர்கள் மாணவர்களை தங்களது குழந்தைகள் போல் எண்ணி வழி விட்டுக் கொடுத்தாள் போதுமானதாக இருக்கும் என்று கூறுகிறார்.**

# கப்பலோட்டிய தமிழன் வ. உ.சிதம்பரனார் 150வது பிறந்த தின விழா



**சாத்தூர்,செப். 07 2021:** கப்பலோட்டிய தமிழன் வ. உ.சிதம்பரனார் 150வது பிறந்த தின விழா ,சாத்தூர் நகர வட்டார வெள்ளாளர் சமுதாயத்தின் தலைவர் சங்கரேஸ்வரன் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் சாத்தூர் நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் டி.எஸ். அய்யப்பன் ,விருதுநகர் மேற்கு மாவட்ட பொதுச்செயலாளர் ஜோதிநிவாஸ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு வ.உ.சிதம்பரனார் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். சாத்தூர் சட்டமன்ற தொகுதி இளைஞர் காங்கிரஸ் தலைவர் கார்த்திக், நகர துணைத்தலைவர் சேதுராமலிங்கம் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். மாவட்ட செயலாளர் சந்திரன், கிழக்கு வட்டார காங்கிரஸ் கமிட்டி தலைவர் சுப்பையா, ஒன்றிய செயலாளர் இரமேஷ், மேற்கு வட்டார துணை தலைவர் ஒத்தையால் முத்து வேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர மாணவரணி தலைவர் சங்கர் பாண்டியன், சத்திரப்பட்டி லட்சுமணன், காங்கிரஸ் மூத்த தலைவர் பாலு நாயக்கர், படந்தால் ராகுல் மற்றும் காங்கிரஸ் பேரியக்க நிர்வாகிகளும் தொண்டர்களும் கலந்து கொண்டனர்.

# தர்மராஜபுரத்தில் சாலையில் செல்வது மழைநீர் அல்ல குடிநீர்



வருஷநாடு செப்டம்பர் 07 2021: கடமலை மயிலை ஒன்றியம் வருஷநாடு ஊராட்சியில் தர்மரஜபுரம் வசந்தம் சொசைட்டி செல்லும் சாலையில் சுமார் 100 குடும்பங்கள் அந்த தெருவில் வசித்து வருகின்றனர். அதே கிராமத்தில் மேட்டுப்பகுதி யில் உள்ள தெருவில் சிமெண்ட் சாலை அமைத்து வடிகால் வசதியின்றி இருப்பதால் அதில் மக்கள் பயன்படுத்தும் குடிநீர் மற்றும் கழிவுநீர் இச்சாலையில் ஊடுருவி வருகின்றது. மேலும் தற்போது இந்த தெருவில் உள்ள தார்சாலை கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட தார் சாலை பெயர்ந்து குண்டும் குழியுமாக உள்ளது. இச்சாலை வழியாக அப்பகுதி விவசாயிகள் அனைவரும் விளைநிலங்களுக்கு செல்வதும் விளைபொருட்களை கொண்டுவருவதும் வசந்தம் சொசைட்டி என்ற பெயரில் தனியார் நிறுவனமும் இலவம் பஞ்சு குடோன் என எப்பொழுதும் மக்கள் நடமாட்டம் உள்ள சாலை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே வருஷநாடு ஊராட்சி நிர்வாகம் நிதி ஒதுக்கீடு செய்து வடிகால் வசதி மற்றும் தார்ச்சாலை அல்லது சிமெண்ட் சாலை அமைத்து கொடுக்க வேண்டும். என அப்பகுதியில் சமூக ஆர்வலர் போத்தி ராஜா மற்றும் வருஷநாடு வார்டு உறுப்பினர் வாஞ்சிநாதன் ஆகியோர் கிராம பொதுமக்கள் சார்பாக கோரிக்கை வைக்கின்றனர்.

# தொப்பம்பட்டி ஒன்றியத்திற்கு உட்பட்ட கள்ளிமந்தயம் ஊராட்சியில் கோவிசீல்டு தடுப்பூசி முகாம் நடைபெற்றது



ஒட்டன்சத்திரம், செப்டம்பர் 07 2021: திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம் , கள்ளிமந்தயம் ஊராட்சியில் கோவிசீல்டு தடுப்பூசி முகாம் மற்றும் கபசுரக் குடிநீர் வழங்கும் நிகழ்ச்சி திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படியும் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களின் ஆலோசனையின் படியும் தொப்பம்பட்டி ஒன்றிய பெருந்தலைவர் பி.சி.தங்கம் தலைமையில் நடைபெற்றது. கொரோனா நோயின் தாக்கம் உலக நாடுகளையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் மீண்டும் 3-வது அலை தாக்கக்கூடும் என்ற நிலையில் கொடிய நோய் கொரோனாவினை போக்கும் வகையில் உலக நாடுகள் பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகின்றன. இந்த சூழ்நிலையில் முன்னதாக 2-வது அலையில் திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொரோனாநோய் தாக்குதலின் அச்சுறுத்தலில் இருந்து மக்களை மிகத் துரிதமாக காப்பாற்றினார். இதனை அடுத்து 3-வது அலையில் இருந்து மக்களை காப்பாற்ற வேண்டும் எனும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைவருக்கும் கொரோனா நோய் தடுப்பூசி அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இலவசமாக போடப்படுகிறது. அந்த வகையில் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களின் ஆலோசனையின்படி தொப்பம்பட்டி ஒன்றியத்திற்கு உட்பட்ட கள்ளிமந்தயம் ஊராட்சி மக்களுக்கு தடுப்பூசி நடைபெற்றது. இம்முகாமில் சுமார் 500 க்கும் மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் ஆர்வமுடன் பங்கேற்று கோவிசீல்டு தடுப்பூசி போட்டுக் கொண்டனர். மேலும் முக கவசம் அணிந்து சமூக இடைவெளியுடன் கபசுர குடிநீர் அருந்தியும் சென்றனர். இம்முகாமில் தொப்பம்பட்டி ஒன்றிய செயலாளர் தங்கராஜ், ஊராட்சி செயலர் கோதண்டராமன், ஊராட்சி மன்ற தலைவர் எம்.கணேசன், ஊராட்சி மன்ற துணை தலைவர் ராஜேஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தி.ஆனந்தராஜ், தொப்பம்பட்டி ஒன்றிய துணைச் செயலாளர் செல்வராஜ்,வட்டார மருத்துவ அலுவலர் ராஜேந்திரன், மருத்துவ அலுவலர் ராஜேஸ்வரன், தொப்பம்பட்டி கீரனூர் சுகாதார ஆய்வாளர்கள் சுந்தரம், பாலு, சுகாதார செவிலியர்கள் ஜெயமணி, திவ்யபாரதி, அருள்மொழி, ராணி, மருத்துவ பணியாளர் விக்னேஷ், மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், தூய்மைப் பணியாளர்கள் , பொதுமக்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

# பி.எம்.எஸ் பாரதியா ஆட்டோ ஓட்டுனர் சங்கத்தின் சார்பாக மறைந்த உறுப்பினர் குடும்பத்திற்கு நிதியுதவி வழங்குதல்



கன்னியாகுமரி, செப்டம்பர் 07 2021: குமரி மாவட்டம் விவேகானந்தபுரம் சந்திப்பில் பிஎம்எஸ் பாரதிய ஆட்டோ ஓட்டுனர் சங்கம் உள்ளது இந்த சங்கத்தில் சுமார் 35 ஆண்டுகளாக உறுப்பினராக இருந்து வந்தவர். என் வசந்தகுமார் சங்கத்தின் தலைவர் செயலாளர் என பல பதவிகளில் இருந்து சங்கத்திற்கு பல நல்ல திட்டங்களை வகுத்துள்ளார் சங்கத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு பிரச்சனை என்றால் ஓடிச்சென்று தீர்வு காண்பதில் வல்லவராக இருந்துள்ளார் அன்னாரின் மறைவு சங்கத்திற்கு மட்டுமல்ல அவரது குடும்பத்திற்கும் பேரிழப்பாக உள்ளது வசந்த குமார் சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு மரித்து விட்டார். ஆகையால் பி எம் எஸ் பாரதிய ஆட்டோ ஓட்டுனர் சங்கத்தின் சார்பாக அன்னாரின் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. உடன் கலந்து கொண்டவர்கள் கன்னியாகுமரி காவல் நிலைய துணை கண்காணிப்பாளர் அவர்கள் மற்றும் காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் கன்னியாகுமரி முன்னாள் பேரூராட்சி தலைவர் குமரி ஸ்டீபன் மற்றும் சங்க நிர்வாகிகள் தலைவர் செயலாளர் பொருளாளர் மற்றும் வசந்த குமார் குடும்பத்தார் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# 75 வது ஆண்டு சுதந்திரத்தை நினைவு கூறும் வகையில் குமரி மாவட்டம் நாகர்கோவில் அண்ணா விளையாட்டு அரங்கம் முன்பு மாணவர்களுக்கான சுதந்திர தொடர் ஓட்டம் நடைப்பெற்றது




கன்னியாகுமரி, செப்டம்பர் 07 2021: நமது நாட்டின் 75 வது ஆண்டு சுதந்திரத்தை நினைவு கூறும் வகையில் குமரி மாவட்டம் நாகர்கோவில் அண்ணா விளையாட்டு அரங்கம் முன்பு மாணவர்களுக்கான சுதந்திர தொடர் ஓட்டம் நடைப்பெற்றது. இதில் குமரி மாவட்ட ஆட்சியர்.அரவிந்த் கலந்து கொண்டு கொடியசைத்து தொடங்கி வைத்தார், அதை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர்.அரவிந்த் மாணவர்களுடன் ஐந்து கிலோமீட்டர் தொடர் ஓட்டத்தில் பங்கேற்று ஓடினார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ஆட்சியர்.அரவிந்த் இன்று நடைப்பெற்ற இந்த மினி மராத்தான் சுதந்திரத்தை நினைவூட்டும் வகையிலும் அரசாங்கம் சார்பில் இந்தியா முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது.அதேபோல் குமரி மாவட்டத்தில் இன்று இந்த தொடர் ஓட்டம் நடைபெற்றது, இதில் உடல் ஆரோக்கியம், கட்டுக்கோப்பு மற்றும் தடுப்பூசி போட்டுக் கொள்வதன் அவசியம் ஆகியவற்றை வலியுறுத்தி இந்த மினி மாரத்தான் ஓட்டம் நடைபெற்றதாக தெரிவித்தார், இதில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர். டேவிட் டேனியல்,தேசிய தடகள வீரர்.ஆறுமுகம் பிள்ளை மற்றும் 100க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# "இது வீடா? இல்ல லாட்ஜ் அறையா?" : மதுரை குடிசைமாற்று வாரிய குடியிருப்பு கட்டுமானத்தில் பயனாளிகள் குற்றச்சாட்டு



மதுரை, செப்டம்பர் 07 2021: மதுரையில் குடிசை மாற்று வாரியம் கட்டும் குடியிருப்பில் முறைகேடு நடைபெற்றிருப்பதாக பயனாளிகள் புகார் தெரிவித்துள்ள நிலையில், அரசின் ஒப்புதலுடனேயே வீடுகள் கட்டப்பட்டு வருவதாக அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

மதுரை ஆரப்பாளையம் மஞ்சள் மேடு பகுதியில் இருந்த குடிசைமாற்று வாரிய குடியிருப்பில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்த 300 குடும்பங்களுக்கு, மாற்று வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக கடந்த 2019 ஆண்டு அங்கிருந்த குடும்பங்கள் காலி செய்யப்பட்டு பழைய வீடுகள் இடிக்கப்பட்டன.

மத்திய அரசின் "அனைவருக்கும் வீடு" திட்டத்தின் கீழ், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் சார்பில் கடந்த 2020 அக்டோபர் மாதம் முதல் புதிய வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மத்திய அரசின் 4.80 கோடி ரூபாய், தமிழக அரசின் 29.24 கோடி ரூபாய் மற்றும் பயனாளிகளின் பகிர்வு தொகையான 3.20 கோடி ரூபாய் என மொத்தம் 37 கோடியே 24 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்படும் வீடுகள், அடுத்தாண்டு ஜனவரியில் பயன்பாட்டிற்கு கொடுக்க திட்டமிடப்பட்டு இருந்தது.

இந்நிலையில், அந்த வீடுகள் கட்டுமானத்தில் முறைகேடுகள் நடைபெற்று உள்ளதாக பயனாளிகள் குற்றச்சாட்டு வைத்துள்ளனர். அங்கு குடியிருந்த 300 குடும்பங்களுக்கு புதிதாக 300 வீடுகள் கட்டுவதற்கு பதிலாக 320 வீடுகள் கட்டப்பட்டு வருவதாகவும், அதனால் 480 சதுர அடிக்கு கட்ட வேண்டிய வீடுகளின் அளவு குறைத்து 276 சதுர அடிக்கு மட்டுமே கட்டப்படுவதாகவும் புகார் தெரிவித்துள்ளனர்.

முதலில் இருந்த வீட்டின் அளவு 172 சதுர அடி தான். இப்போது கட்டப்படும் அளவு 256 சதுர அடி. முதலில் ஒரு ஹால், ஒரு சமையலறை, கழிப்பறை & குளியலறை சேர்ந்து இருந்ததால் அளவு பெரிதாக தெரிந்துள்ளது. இப்போது, ஹால், படுக்கையறை, சமையலறை, கழிப்பறை மற்றும் குளியலறை தனித்தனியாக உள்ளன அதனால் அளவு சிறியதாக தெரிகிறது. இந்த கட்டுமானங்கள் முழுமையாக அரசின் ஒப்புதலுக்கு பிறகே கட்டப்படுகின்றன. மாற்று வீடுகளுக்கு மாறும் போது சில இடங்களில் வாடகை வீட்டிற்கான உதவி தொகைகளை வழங்கப்பட்டு உள்ளன. ஆனால், மஞ்சள் மேடு திட்டத்தில் அவ்வாறு கொடுக்கவில்லை" என தெரிவித்தனர்.

புதிய வீடுகளை விட பழைய வீடுகள் விசாலமாக தெரிந்திருக்கலாம், ஆனால் அவைகளை நவீனப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இப்படி கட்டுவதாக அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆனால், நவீனம் என்ற பெயரில் வசிக்க வழியின்றி வீடுகள் கட்டுவதில் என்ன பயன் என பயனாளிகள் கேள்வி எழுப்புகின்றனர். குடிசை மாற்று வாரிய வீடுகளின் கட்டமைப்பில் பயனாளிகளின் கருத்துக்களை கேட்டு கட்டுவதில் அரசு கவனம் செலுத்துமா என்கிற எதிர்பார்ப்பும் எழுந்துள்ளது.

# தேனி மாவட்டம் பெரியகுள ம் அருகே வ.உ.சி 150-வது பிறந்தநாள் விழா



தேனி, செப்டம்பர் 07 2021: தேனி மாவட்டம் பெரியகுள ம் அருகே பகுதிகளில் தாமரைக்குளம் ,வடுகபட்டி ,ஜெயமங்கலம் , மேல்மங்கலம் ,சில்வார்பட்டி ,குள்ளப்புரம் ,தேவதானப்பட்டி மற்றும் முக்கிய பகுதிகளில் சிலம்பு ஆசான்கள் கலைவளர்மணி திருநாவுக்கரசும் சுரேஷ் ,சிலம்பு விளையாட்டு வீரர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பு விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. மகரிஷி சிலம்பு கலைக்கூடம் நிறுவனர் ஜெயக்குமார் ,கோபி ஆகியோர் கலந்து கொண்டனர் வ உ சி கல்வி அறக்கட்டளை வள்ளலார் படிப்பகம் சார்பாக வ உ சி உருவப்படத்திற்கு தலைவர் மாடசாமி முன்னிலையில் மலர்த்தூவி வணங்கி வருகை புரிந்த அனைவர்க்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

# கடமலை மயிலை ஒன்றியத்தில் கண்மாய் ஆக்கிரமிப்பு விவசாயிகள் கவலை

வருஷநாடு செப்டம்பர் 07 2021: ஆண்டிபட்டி வட்டம் கடமலை மயிலை ஒன்றியம் பொன்னன் படுகை அருகே உள்ள கோவிலாங்குளம் கண்மாய் தனிநபர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் விவசாய பாசனத்திற்கு மழைநீர் தேக்க சிக்கல் ஏற்படுவதாக இப்பகுதி விவசாயிகள் கூறுகின்றனர். இந்த கண்மாய் சுமார் 3 8 ஏக்கர் பரப்பளவில் கோவிலாங்குளம் கண்மாய் உள்ளது. இந்த கண்மாய் நீரை நம்பி கடமலை மயிலை



ஒன்றியத்தில் அதனைச் சுற்றியுள்ள விவசாயிகள் நீரை பயன்படுத்தி விவசாய விளைநிலங்களை பாதுகாத்து வருகின்றனர். தனிநபர் ஆக்கிரமிப்பால் 3 8 ஏக்கர் பரப்பளவில் இருந்த கண்மாயில் தற்போது 10 ஏக்கர் வரை சுருங்கி உள்ளதாகவும் கூறுகின்றனர். இப்பகுதி விவசாயிகளுக்கு தேவையான நீர்தேக்கத்தில் சிரமம் உள்ளதாகவும் மழைக்காலங்களில் நீர் தேங்கினால் மட்டுமே நிலத்தடி நீர்மட்டம் உயரும் எனவும் வறட்சி காலங்களில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாத வண்ணம் தொடர்ந்து விவசாயம் நடக்க ஏதுவாக இருப்பதாகவும் இந்த கண்மாயில் தேங்கும் நீரை இப்பகுதியில் உள்ள ஆடு மாடுகள் தண்ணீர் குடிக்க பயன்படுத்தி வந்ததாகவும் கூறுகின்றனர். எனவே இப்பகுதி விவசாயிகள் மற்றும் ஆடு மாடு வளர்ப்பவர்கள் நிலையை கருத்தில் கொண்டு நாட்டின் முதுகெலும்பாக இருக்கும். விவசாயத்தை காக்க கண்மாயில் ஏற்பட்டுள்ள தனிநபர் ஆக்கிரமிப்பை அகற்றி தூர்வாரி மழை நீரை சேமிக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை வைக்கின்றனர்.

**கனம் வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி,**

மே. எ. அதிமுக.எண். 643/2020
நாள். 18/06/2020

பொ. வெங்கடசாமி
த/பெ பொஜ்ஜிகவுண்டர் (லேட்)
பாலிநாயனப்பள்ளி. (கிராமம்)
பாலிநாயனப்பள்ளி. ( அஞ்சல்)
பர்கூர். (வட்டம்)
கிருஷ்ணகிரி. (மாவட்டம்)
-மனுதாரர்

- இடையே-

திரு வட்டாட்சியர்.
(பிறப்பு & இறப்பு பதிவாளர்)
பர்கூர்.
- எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் பொ. வெங்கடசாமி த/பெ பொஜ்ஜிகவுண்டர் , என்பவர் கடந்த 19/04/2006 -ம் தேதியன்று , மேற்கானும் விலாசத்தில் உள்ள அவரது இல்லத்தில் இறந்தார். அவரது இறப்பு குறித்து பதிவு செய்யக்கோரி கிருஷ்ணகிரி சார் ஆட்சியர் அலுவலகத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். மேற்படி தேதியில் மனுதாரரின் தந்தை பொஜ்ஜிகவுண்டர் என்பவருக்கு இறப்பு சான்று வழங்க, எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால், சார் ஆட்சியரிடம் 15 நாட்களுக்குள் ஆட்சேபனை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது. அவ்வாறு 15 நாட்களுக்குள் ஆட்சேபனை செய்ய தவறினால் மேற்படி பொஜ்ஜிகவுண்டர் என்பவருக்கு இறப்பு சான்று வழங்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

/சார்ஆட்சியர் உத்திரவுபடி//

**I.S.பசுபதி,**B.A.B.L..D.LL.
வழக்கறிஞர் & நோட்டரி,
கிருஷ்ணகிரி.

# வருசநாடு அருகே மூல வைகை ஆற்றில் கட்டப்பட்ட தடுப்பணையை காணவில்லை பொதுமக்கள் புகார்



**வருஷநாடு செப்டம்பர் 07 2021: கடமலை மயிலை ஒன்றியம் வருஷநாடு ஊராட்சி மொட்டை பாறை அருகே மூல வைகையாற்றில் இப்பகுதி விவசாயிகள் மற்றும் குடிநீர்த் தேவைகள் நிலத்தடி நீர்மட்டம் உயர பொதுப்பணித் துறையினர் மூலம் தடுப்பணை கட்டப்பட்டது. இதனால் இப்பகுதி மக்கள் விவசாயத்திற்கும் தண்ணீர் தேவைகளையும் பூர்த்தி செய்தனர். இந்த தடுப்பணையை நம்பி நான்கு ஊராட்சியின் பொதுமக்களும் அதற்கு உட்பட்ட விவசாயிகளும் பல ஏக்கர் விளைநிலங்களும் பயன்படுத்தப்பட்ட வந்த நிலையில் தற்போது தடுப்பணை முற்றிலும் சேதமடைந்து நீர் தேக்க முடியாத நிலையில் இருக்கின்றது நீர் தேங்கியதால் மணல் திருட்டு இப்பகுதியில் தடுக்கப்பட்டது. கோடைகாலங்களில் தடையின்றி பொதுமக்களுக்கு குடிநீர் தேவைகளும் பூர்த்தி அடைந்து எனவே இப்பகுதி விவசாயிகள் மற்றும் ஊராட்சி பொதுமக்கள் நலன் கருதி மழை வெள்ளத்தில் காணாமல் போன தடுப்பணையை கட்டித்தர பொதுப்பணித் துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் முன்வர வேண்டும் என இப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.**




**ஆண்டிபட்டி: ஆண்டிபட்டியில் இருந்து தேனி வரை மணிக்கு 120 - கிலோமீட்டர் வேகத்தில் இரயில் இஞ்சின் இயக்கி சோதனை நடத்தப்பட்டது. காலை 11-30 மணிக்கு ஆண்டிபட்டி இரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்ட இரயில் இஞ்சின் மணிக்கு 120- கிலோமீட்டர் வேகத்தில் பயணித்து 17- கிலோமீட்டர் தூரமுள்ள தேனிக்கு 10- நிமிடங்களில் வந்து சேர்ந்தது.**

# கதவை உடைத்து பணம் திருட்டு மர்ம ஆசாமிகளுக்கு வலை

**விக்கிரவாண்டி, செப். 06 2021: விக்கிரவாண்டி அருகே வீட்டின் பின்பக்க கதவை உடைத்து பணம் திருட்டு. மர்ம ஆசாமிகளை போலீசார் தேடி வருகின்றனர்.**

**திண்டிவனம் வட்டம் நாகந்தூர் கிராமத்தை சேர்ந்தவர் பட்டாபி ,77: விவசாயி. இரவு தனது மனைவி வரலட்சுமி,70 யுடன் விழுப்புரத்தில் நடந்த திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவீடு வந்து படுத்து தூங்கியுள்ளனர். காலையில் எழுந்து பார்க்கும் போது வீட்டின் கதவு உடைக்கப்பட்டிருந்தது. மேலும் பீரோவின் லாக்கரில் இருந்த ரொக்க பணம் ரூபாய் 10 ஆயிரம் மற்றும் லைசென்ஸ்கள் காணாமல் போயிருந்தது.**

**இது பற்றி பெரியதச்சசூர் போலீசார் வழக்கு பதிந்து விசாரணை செய்து வருகின்றனர்.**



**தேனி: தேனி மாவட்டம் பெரியகுளம் தென்கரையில் உள்ள மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளிதர ஸ்வாமிஜி அவர்களின் பரிபூரண அருளாசியுடன் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவத்தை முன்னிட்டு பெரியகுளம் நாமத்வாரில் 4ம் நாள் மாலை நாமகீர்த்தனம் மற்றும் மதுரகீதம் பஜனை நடைபெற்றது.**

# மதுரை சிந்தாமணியில் வ.உ.சி. 150வது பிறந்த நாளை முன்னிட்டு பிள்ளைமார் சங்க கூட்டமைப்பு சார்பாக உருவப்படத்திற்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு அன்னதானம்

*மதுரை, செப்டம்பர் 07 2021:* வ.உ.சி. 150வது பிறந்த நாளை முன்னிட்டும் அரசு விழாவாக அறிவித்து அதை கொண்டாடும் வகையிலும் சிந்தாமணியில் அனைத்து பிள்ளைமார் சங்க கூட்டமைப்பு சார்பாக உருவப்படத்திற்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு அன்னதானம்.





கப்பலோட்டிய தமிழன் செக்கிழுத்த செம்மல் ஏழை எளிய மக்களின் சட்டப் போராட்டத்திற்கு உறுதுணையாக இருந்தவர் சுதந்திரப் போராட்டத்தின் கதாநாயகன் கொத்தடிமைக்கு எதிராக களம் கண்டு தொழிலாளர்களுக்கு உறுதுணையாக இருந்து பல்வேறு தமிழ் நூல்களை எழுதி பாரதியார்,முகைதீன் பிள்ளை ஆகியோரின் பாசத்திற்குரிய தேசிய விடுதலைப் போராட்ட வீரர் வ.உசிதம்பரனார் 150வது பிறந்தநாள் விழா இன்று சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

மேலும் தமிழக அரசு அவரது பிறந்தநாளை அரசு விழாவாக கொண்டாட அறிவித்துள்ளது. அதனைத் தொடர்ந்து இன்று அவரது 150வது பிறந்தநாள் நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஒன்றியத்துக்குட்பட்ட சிந்தாமணி சின்ன அனுப்பானடியில் அனைத்து பிள்ளைமார் சங்க கூட்டமைப்பு சார்பாக தலைவர் ராமசுப்பிரமணியன் மற்றும் மாரியப்பன் தலைமையில் வ உ சிதம்பரனார் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 1000க்கும் மேற்பட்ட ஏழை எளிய பொதுமக்களுக்கு இனிப்பு உள்ளிட்ட உணவுவழங்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து இளைஞர்கள் இரு சக்கர வாகனத்தில் பேரணியாக ஊர்வலம் சென்றனர்.

இந்நிகழ்ச்சியில் செயலாளர் ரவி பொருளாளர் லோகநாதன் திரவியம் மற்றும் அருணாச்சலம் ஆறுமுகம் மகாலிங்கம் பரமசிவம் உள்ளிட்ட அனைத்து பிள்ளைமார் சங்க கூட்டமைப்பு நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# வினாயகர் சதுர்த்தி ஆலோசனை கூட்டம் கைவினை கலைஞர்கள் பங்கேற்பு

*விக்கிரவாண்டி, செப். 06 2021:* விக்கிரவாண்டி தாலுகாவில் வினாயகர் சதுர்த்தி விழா குறித்து கைவினை கலைஞர்களுக்கான ஆலோசனை கூட்டம் நடந்தது.



விக்கிரவாண்டி தாலுகா அலுவலகத்தில் நேற்று மாலை நடந்த கூட்டத்திற்கு ஆர்.டி.ஓ., அரிதாஸ் தலைமை தாங்கினார் . தாசில்தார் தமிழ்செல்வி முன்னிலை வகித்தார். மண்டல துணை தாசில்தார் செல்வமூர்த்தி வரவேற்றார்.

கூட்டத்தில் ஆர்.டி.ஓ., அரிதாஸ் பேசியதாவது: கொரோனாநோய் தொற்று பரவலை தடுக்கும் விதமாக தமிழக அரசு தொலை நோக்கு பார்வையோடு வினாயகர் சதுர்த்தி விழா தனிநபர் இல்லங்களை தவிர அமைப்பு சார்ந்து பொது இடங்களில் வழிபட தடை விதித்துள்ளது. கடந்த ஓணம் பண்டிகையின் போது , அதற்கு முன்னர் இரட்டை இலக்கில் இருந்த நோய் தொற்று பண்டிகைக்கு பிறகு ஒரே நாளில் 32 ஆயிரத்தை தொட்டது. இதை கருத்தில் கொண்டு அரசு பொது இடங்களில் வழிபட தடை விதித்துள்ளது.

இதனால் கடந்த 2 ஆண்டுகளாக கைவினை கலைஞர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக கூறியுள்ளனர்.இது குறித்து தமிழக அரசிற்கு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அறிக்கை அனுப்பி அவர்களுக்கு உதவி செய்ய வழி செய்யப்படும் . தற்பொழுது அரசு அறிவித்துள்ள விதிமுறை தனி நபர் வழிபாட்டிற்கு மட்டுமே அனுமதி அளித்துள்ளது. இவ்வாறு ஆர்.டி.ஓ., அரிதாஸ் பேசினார்.


முன்னதாக கூட்டத்தில் கைவினை கலைஞர்கள் சங்க மாநில பொருளாளர் விஷ்ணுராஜ், தமிழக அரசு சினிமா, டாஸ்மாக், திருமணம் போன்ற விழாக்களுக்கு அனுமதியளித்துள்ளது. ஆனால் ஆண்டிற்கு ஒருநாள் மட்டும் வருவாய வரக்கூடிய வினாயகர் சதுர்த்தியை தடைசெய்தது வேதனை அளிக்கிறது. கைவினை கலைஞர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. எங்கள் நிலைமையை பற்றி தமிழக அரசு சிந்தித்து விழா நடத்த அனுமதியளிக்க வேண்டும் என கோரினார்.

தலைமையிடத்து துணை தாசில்தார் ரேவதி, போலீஸ் இன்ஸ்பெக்டர் வினாயகமுருகன், பி.டி.ஓ., எழிலரசன், பேரூராட்சி செயல் அலுவலர் அண்ணாதுரை, வருவாய் ஆய்வாளர்கள் சார்லின், திருமதி மற்றும் தாலுகாவிலுள்ள கைவினை கலைஞர்கள் பங்கேற்றனர்.

விக்கிரவாண்டி தாலுகா அலுவலகத்தில் ஆர்.டி.ஓ., அரிதாஸ் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடந்தது. அருகில் தாசில்தார் தமிழ்செல்வி.

# விக்கிரவாண்டி அடுத்த பேரணியில் மூன்று கோவில்களுக்கு மண்டல பூஜை நிறைவு விழா நடந்தது

*விக்கிரவாண்டி,செப். 06 2021:* விக்கிரவாண்டி அடுத்த பேரணியில் மூன்று கோவில்களுக்கு மண்டல பூஜை நிறைவு விழா நடந்தது.



திண்டிவனம் வட்டம் பேரணி கிராமத்திலுள்ள செல்வ வினாயகர் , முத்து மாரியம்மன்,செல்லியம்மன் கோவில்களுக்கு கும்பாபிசேஷகம் கடந்த ஜூலை மாதம் 16ம் தேதி வெகு விமர்சையாக நடந்தது. இதையடுத்து மண்டல பூஜைகள் தொடர்ந்து நடந்தது.நேற்று முன்தினம் 48ம் நாள் மண்டல பூஜை நிறைவு விழாவை முன்னிட்டு விநாயகர், முத்து மாரியம்மன், செல்லியம்மன் ஆகிய சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேகம் நடந்தது.

கும்ப கலசம் வைத்து யாக குண்டம் அமைத்து சிறப்பு யாகசாலை பூஜை வழிபாடுகள் நடந்தது. பின்னர் சாமிகளுக்கு புனித நீர் ஊற்றி மகா தீபாராதனை நடந்து, பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.பூஜைகளை பெரியதச்சூர் சிவகுருநாதன் தலைமையில் சிவக்குமார் மற்றும் குழுவினர் செய்தனர்.

இரவு சாமி வீதி உலா நடந்தது. பூஜையில் கிராம முக்கியஸ்தர்கள் ,பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

விக்கிரவாண்டி அடுத்த பேரணியில் மூன்று கோவில்களுக்கு மண்டல பூஜை நிறைவுவிழாவை முன்னிட்டு யாகசாலை பூஜை நடந்தது.

விக்கிரவாண்டி அடுத்த பேரணியில் மண்டலபூஜை நிறைவுவிழாவை முன்னிட்டு செல்லியம்மன் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சி அளித்தார்.

# திண்டிவனத்தில் போலீசார் போல் நடித்து நூதன முறையில் ரூ.55 ஆயிரம் பணம் கொள்ளை

*திண்டிவனம், செப். 07 2021:* திண்டிவனத்தில் டிப்டாப் ஆசாமிகள் போலீசார் போல் நடித்து நூதன முறையில் பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம், கடைவீதி அருகே மக்கள் நடமாட்டம் அதிகளவில் உள்ள மாரியம்மன் கோவில் சந்திப்பில் சென்னை, திருவொற்றியூர், சோமசுந்தரம் நகர் பகுதியை சேர்ந்த பூபாலன் என்பவர் சென்னையில் சரிதா எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்தின் மூலம் திண்டிவனம் உள்ள அச்சகங்களில் பத்திரிக்கைகளை மொத்த ஆர்டர் வாங்கி பண வசூல் செய்யும் தொழிலில் கடந்த 23 வருடங்களாக ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது. இந்நிலையில் நேற்று திண்டிவத்தில் உள்ள சில அச்சகங்களில் பத்திரிக்கை வழங்கிய வகையில் 55 ஆயிரம் ரூபாய் வசூல் செய்து விட்டு வரும் போது திண்டிவனம் மாரியம்மன் கோவில் தெரு நான்கு முனை சந்திப்பு அருகே உள்ள பாலாஜி மருத்துவமனை எதிரே இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் அவரை நோட்டமிட்டு வந்துள்ளனர். மருத்துவமனை முன் புறம் தொப்பி அணிந்த டிப்டாப் ஆசாமி அங்கே நின்று கொண்டு பூபாலனை சைகை காட்டி அழைத்துள்ளார். அதில் ஒருவர் நான் போலீஸ் உன்னை அய்யா கூப்பிடுகிறார். அவரைப் பார்க்க வருமாறு பூபாலனை அழைத்து சென்றுள்ளார். அருகில் வந்த பூபாலனை அங்கு நின்றிருந்த ஆசாமி யாருய்யா நீ? எங்கே போற.? பேக்குல என்ன கஞ்சா வா வச்சிருக்க? உன் மூஞ்சே சரியில்லேயே? என போலீஸார் விசாரணை செய்வதுபோல் விசாரணை மேற்கொண்ட அந்த இரு ஆசாமிகளும் பின்னர் கையில் இருக்கும் பேக்கை காட்டுமாறு மிரட்டியுள்ளனர். அவரோ சார். நான் அப்படிப்பட்ட ஆள் இல்லை. நான் அச்சு தொழிலில் ஆர்டரும், கலெக்ஷனும் செய்து வருகிறேன். நீங்க என் பேக்கை கூட செக் பண்ணுங்க. என்று சொல்லியிருகிறார். உடனே அவர்கள் அவருடைய பேக்கை வாங்கி சோதனை செய்வது போல் நடித்து அவரையும் சோதிக்கின்றனர்.பிறகு அதில் உள்ள பணத்தை அவருக்கு தெரியாமலேயே எடுத்த நபர் உடன் இருந்த இன்னொரு நபரிடம் பணத்தை கொடுத்திருகிறார். அவரோ பணத்தை வாங்கி மறைத்து வைத்துக்கொண்டபிறகு சரி போ என கூறியிருக்கின்றனர்.

தன்னுடைய பணம் 55 ஆயிரத்தை இழந்து விட்டோம் என அறியாத பூபாலன் சிறிது தூரம் சென்று தனது பேக்கை திறந்து பார்த்திருக்கிறார். பணம் இல்லாதது கண்டு திடுக்கிட்ட பூபாலன் அப்போது தான் ஏமாற்றப்பட்டதை அறிந்து அதிர்ந்து போனார்.



போலீசார் என கூறி தன்னை ஏமாற்றி பணம் பறித்த டிப்டாப் ஆசாமிகள், பைக்கில் மறைந்ததை உணர்ந்தார்.

இந்த நூதன திருட்டு குறித்து பூபாலன் திண்டிவனம் நகர காவல் நிலையத்திற்கு சென்று தகவல் தெரிவித்தார். இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி காட்சிகளை கைப்பற்றி குற்றவாளிகளை தேடி வருகின்றனர். மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள வீதியில் பட்டப்பகலில் போலீசார் என கூறி நூதன முறையில் பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சமீபகாலமாக திண்டிவனம் நகரப்பகுதியில் நூதன முறையில் பணம் கொள்ளையடிக்கப்பட்டு வரும் சம்பவங்கள் தொடர்கதையாக நடந்து வருகிறது. ஆகவே காவல்துறையினர் நகரின் முக்கிய வீதிகளில் சி.சி.டிவி கேமராக்களை பொருத்த வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# தேனி மாவட்டம் பெரியகுளத்தில் தென்கரை தெற்குத்தெரு அனைத்து வேளாளர் சமுதாயத்தின் சார்பில் வ உ சி 150 வது பிறந்தநாள் விழா

*தேனி, செப்டம்பர் 07 2021:* தேனி மாவட்டம், பெரியகுளத்தில் தென்கரை தெற்குத்தெரு அனைத்து வேளாளர் சமுதாயத்தின் சார்பில் வ உ சி 150 வது பிறந்தநாள் விழா உருவப்படம் வைத்து மலர்த்தூவி கொடியேற்றி அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. உடன் தமிழக அரசு வ உ சி ஐயா அவர்களுக்கு தியாக திருநாளாக அறிவித்த தமிழக அரசுக்கு நன்றியையும் வாழ்த்துக்களையும் சார்பாக தெரிவித்தனர். சிறப்பு அழைப்பாளராக மாநில அமைப்பு செயலாளர் ரவிபிள்ளை வட்டார தலைவர், மாவட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர் .வடகரை வைத்யநாதபுரத்தில் வ உ சி நல சங்கம் சார்பாகவும், நேதாஜி தேவர் பாய்ஸ் சார்பாகவும் தேனீ மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் ராஜபாண்டியன் அவர்கள் வ உ சி சிலைக்கு மலர் வைத்து சிறப்புரையாற்றினார். முக்கிய பிரமுகர்களுக்கு மேல



தளத்துடன் வரவேற்பு அளிக்கப்பட்டு சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. வருகைபுரிந்த அனைவர்க்கும் மாபெரும் அன்னதானம் வழங்கப்பட்டது. தேச பக்தன் திகுடு தும்பா குரூப்ஸ் மேதகார படித்துறை சார்பாக பொதுமக்களுக்கு வேளாளர் மண்டபத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது. டாக்டர் இளங்கோவன், எ கணேசன் இணைந்து வ உ சிதம்பரனார் 150 வது சிறப்பு மலர் பிடிசி சூரியவேலு தலைமையில் வெளியீட்டு அனைத்து பொதுமக்களுக்கும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் நித்தியானந்தம், பாலசுப்பிரமணி, முத்துமாணிக்கம், மற்றும் முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# வருஷநாடு பவள நகர் அருகே இரும்பு தடுப்பு வேலி அமைக்க கோரிக்கை

*வருஷநாடு, செப்டம்பர் 07 2021:* வருஷநாடு ஊராட்சி பவள நகர் முதல் வாழவந்தாள்புரம் செல்லும் இணைப்புச் சாலை மிக குறுகிய ஆபத்தான வளைவில் இருப்பதால் இதில் விபத்து ஏற்பட்டு ஏற்கனவே உயிர் பலியும் ஏற்பட்டுள்ளது. சிலர் வாகனங்களில் வரும்பொழுது நிலைதடுமாறி படுகாயம் ஏற்பட்ட நிலையம் உள்ளது. இப்பகுதியி இல்லை விளைநிலங்கள் அதிகமாக உள்ளதால் அதைச் சுற்றியுள்ள வாழவந்தாள் புரம் எருமை சுனை முறுக் கோடை பொதுமக்கள் வருஷநாடு ஊராட்சிக்கு இப்பாதையை பயன்படுத்தி வருகின்றனர். பொது மக்கள் அதிகம் பயன்படுத்தும் இச்சாலை



மிகவும் அபாயகரமான பாதையாக உள்ளது. மழை காலங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு இந்த ஓடை வழியாக வருவதால் நிலைதடுமாறி விழுபவர்கள் ஓடையில் தண்ணீரில் விழுகின்ற நிலையும் ஏற்படுகிறது. எனவே இப்பகுதி பொது மக்களின் நலன் கருதி குறுகிய வளைவான சாலையில் உள்ள பள்ளத்தின் அருகே தடுப்பு வேலி அல்லது தடுப்பு சுவர் அமைத்து இனிவரும் காலங்களில் விபத்து ஏற்படாத வண்ணம் ஊராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.

# சொந்த வீடு இல்லாத பட்டியலின மக்களுக்கு பட்டா வழங்க வேண்டும் தலித் விடுதலை என்ற மற்றும் தோழமை அமைப்புகள் கோரிக்கை

*ஒட்டன்சத்திரம் செப்டம்பர் 06 2021:* திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் பட்டம் கள்ளிமந்தயம் கிராமம் சர்வே எண் 529/6-ல் சுமார் 3 ஏக்கர் அரசு தீர்வை ஏற்படாத தரிசு நிலம் கடந்த ஓராண்டுக்கு முன்பாக பழனி வருவாய் கோட்டாட்சியர் அவர்களால் ஆதிதிராவிட நத்தமாக வகை மாற்றம் செய்யப்பட்டு கள்ளிமந்தயம் பகுதியில் சொந்த வீடு இல்லாத பட்டியலின மக்களுக்காக பட்டா வழங்க பயனாளிகள் தேர்வு செய்யப்படும். பட்டா வழங்காமல் காலம் கடத்தும் ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் மு.முத்துச்சாமி அவர்களை செப்டம்பர் 1-ந்தேதி சந்தித்து தலித் விடுதலை இயக்கத்தின் மாநில தலைவர்



ச.கருப்பையா, மாநில பொதுச்செயலாளர் சசிகுமார், மாநில துணைத்தலைவர் கள்ளிமந்தயம் கே.ராமர், திண்டுக்கல் மாவட்ட தலைவர் ராஜேந்திரன், தமிழ் புலிகள் கட்சி மாவட்ட துணைச் செயலாளர் ப.செல்வகுமார், மற்றும் பல்வேறு தோழமை அமைப்பின் நிர்வாகிகள் சந்தித்து கோரிக்கை விடுத்தனர். இறுதியாக வருகின்ற செப்டம்பர் 30-ஆம் தேதிக்குள் அனைத்து பயனாளிகளுக்கும் பட்டா வழங்க வேண்டுமெனவும், மீண்டும் அரசு காலதாமத படுத்தினாள் வருகின்ற செப்டம்பர் 30-ஆம் தேதி வட்டாட்சியர் அலுவலகத்தில் குடியேறும் போராட்டம் நடத்தப்படும் என வலியுறுத்தப்பட்டது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## கடமலைக்குண்டு செல்லப்பிள்ளை கோபால மீட்க தன்னார்வலர்கள் முன்வருவார்களா



**வருஷநாடு, செப்டம்பர் 07 2021: கடமலை மயிலை ஒன்றியத்தில் விருதுநகர் மாவட்டத்தை சேர்ந்த கோபால் என்பவர் கடந்த 20 வருடங்களாக கடமலைக்குண்டு பகுதி மக்களின் செல்லப்பிள்ளையாக வாழ்ந்து வருகிறார். இவர் அப்போது மக்களிடம் உணவு கேட்பதில்லை வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் கொடுக்கும் பணத்தை வைத்து தானாகவே உணவு வாங்கி உட்கொள்கின்றனர். என்று சில கடைக்காரர்கள் இவருக்கு முடிந்த உதவியை செய்து வருகின்றனர். சற்று மனநலம் பாதிக்கப் பாதிக்கப்பட்டாலும் தன்மானத்தை விட்டுக்கொடுக்காமல் இப்பகுதியில் வாழ்ந்து வரும் இவரை தன்னார்வலர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகம் முன்னெடுத்து இவரை காப்பகத்தில் சேர்க்க இப்பகுதி பொதுமக்கள் கேட்டுக் கொள்கின்றனர் சமூக ஆர்வலர்கள் ‘ஹலோ மிர்ரர் மெட்ராஸ்‘ ஆண்டிபட்டி தாலுகா செய்தியாளர் வருஷநாடு செந்தில் குமாரிடம் கேட்டதற்கிணங்க செய்தி வெளியிடப்பட்டுள்ளது.**





**கன்னியாகுமரி:** செப்டம்பர் 5 தேசிய ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர்களை கௌரவிக்கும் விதமாக மாணவ மாணவிகள் ஆசிரியர்களுக்கு மரியாதை நிமிர்த்தமாக பூங்கொத்து கொடுத்தும் இனிப்புகள் பரிமாறியும் ஆசிரியர் தின நிகழ்ச்சியை பள்ளிகளில் சிறப்பாக கொண்டாடினார். டாக்டர்.ராதாகிருஷ்ணன் பிறந்த நாளே தேசிய ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது. டாக்டர். இராதகிருஷ்ணன் சுதந்திர இந்தியாவின் முதல் குடியரசுத் துணைத்தலைவரும், இரண்டாவது குடியரசுத் தலைவரும் ஆவார். ஆசிரியராகத் தன் பணியைத் தொடங்கி, எண்ணற்ற டாக்டர் பட்டங்கள் பெற்று, நாட்டின் மிக உயரிய ஜனாதிபதி பதவியை அடைந்தவர் ஆவார் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளே ‘ஆசிரியர் தினமாக’ செப்டம்பர் 5-ம் தேதி, ஆண்டு தோறும் இந்தியாவில் கொண்டாடப்படுகிறது. ஒரு ஆசிரியராக தன்னுடைய வாழ்க்கையைத் தொடங்கி, பாரத நாட்டின் மிக உயரிய ஜனாதிபதி பதவியை அடைந்த டாக்டர். ராதாகிருஷ்ணன் அவர்களை நினைவு கூரும் நாளே ஆசிரியர் தினம்.



**கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு சிறப்பாக பணியாற்றிய 10 ஆசிரியர்களுக்கு டாக்டர். ராதாகிருஷ்ணன் விருது பாராட்டுச் சான்றிதழ்கள் பதக்கம் மற்றும் தலா ரூ.10 ஆயிரம் வீதம் ரூ.1 லட்சத்திற்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வி.ஜெயச்சந்திர பானு ரெட்டி வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) முருகன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மகேஸ்வரி உள்ளிட்ட பலர் இருந்தனர்.**

## முறுக்கோடை ஊராட்சியில் இரண்டு பாலம் அமைக்க கோரிக்கை

**வருஷநாடு செப்டம்பர் 07 2021:** முருக்கோடை டை ஊராட்சியில் வாழவந்தாள்புரம் முதல் எருமை சுனை கிராமத்திற்கு செல்லும் சாலையில் இரண்டு தரை பாலம் 4 மீட்டர் பள்ளத்தில் சென்று மேலே உள்ள சாலையை அடைகின்ற நிலையில் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு அவ்வழியாக அன்றைய சூழ்நிலையில் மழைக்காலங்களில் ஏற்படுகின்ற நீர் கடந்துசெல்ல கட்டப்பட்டது. தற்போது அப்பகுதியில் விவசாய நிலங்கள் அதிகம் உள்ளதால் மழை காலங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்கால் இரண்டு கிராமத்திற்கு உள்ள இணைப்பு துண்டிக்கப்படுகிறது. மேலும் இப்பகுதியில் விளையும் மா கொட்டை முந்திரி இலவம்பஞ்சு மற்றும் இதர தானியங்கள் கொண்டுவருவதற்கு கனரக வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் இப்பாலம் உள்ளது. இதனால் இப்பகுதி விவசாயிகள் ஆட்டோ மற்றும் கட்ட வண்டி மூலம் விளைபொருட்களை கொண்டு வருகின்றனர். இதனால் கூலி மற்றும் வாடகை இரண்டு மடங்கு அதிகமாகின்றது. எனவே இப்பகுதி பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் நலன் கருதி முருக்கோடை ஊராட்சி நிர்வாகமும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்து இரண்டு தர பாலங்களை அகற்றி போக்குவரத்திற்கு சீரான இரண்டு பாலங்கள் கட்ட இப்பகுதி மக்களும் விவசாயிகளும் கேட்டுக் கொள்கின்றனர். வாழவந்தாள் புரம் கிராமத்தை சேர்ந்த சேதுராமன் பொதுமக்கள் சார்பாக கோரிக்கை வைக்கின்றார். தற்போதைய ஊராட்சி மன்ற தலைவர் குருவம்மாள் சங்கிலி மேற்கண்ட எருமை சுனை கிராமத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## டி.ஆண்டிபட்டி 100 % காப்பீடு செய்துள்ள ஊராட்சி - மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு!

மதுரை, செப்டம்பர் 07 2021: 100 % காப்பீடு செய்துள்ள ஊராட்சி, இந்தியாவில் வங்கியின் உதவியுடன் 100 விழுக்காடு காப்பீடு செய்துள்ள கிராமமாக டி. ஆண்டிப்பட்டி ஊராட்சியை மதுரை மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளார்.



மதுரை: வாடிபட்டியருகே உள்ள டி. ஆண்டிப்பட்டி ஊராட்சியில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நூறு கிராமதிலுள்ள மக்கள் நூறு விழுக்காடு காப்பீடு வசதி பெறும் நிகழ்ச்சி நடைபெற்றது.

வாடிப்பட்டி ஒன்றியத்திற்குட்பட்ட டி.ஆண்டிப்பட்டி ஊராட்சி, டி ஆண்டிப்பட்டி, சின்னமயாநயக்கன்பட்டி ஆகிய இரண்டு கிராமங்களை உள்ளடக்கியது. இங்கு 18 வயதிற்கு மேற்பட்ட பொதுமக்கள் நூறு விழுக்காடு ஒன்றிய அரசின் காப்பீடு திட்டம் மற்றும் ஓய்வுதிய திட்டதின் கீழ் பயனடையும் வகையில், இங்குள்ள யூனியன் பேங் ஆப் இந்தியா வங்கியில் கணக்கு தொடங்கி அதன் மூலம் கிராம மக்கள் அனைவரும் காப்பீடு திட்டங்களில் இணைக்கப்பட்டுள்ளனர். காப்பீடு திட்டத்தில் இணையும் தகுதி உள்ள அனைவரும் காப்பீடு திட்டத்தில் இணைந்ததை அறிவிக்கும் நிகழ்ச்சி டி.ஆண்டிப்பட்டி ஊராட்சியில் நடந்தது. இந்த நிகழ்ச்சியில் மதுரை மாவட்ட ஆட்சியர் அனீஷ் சேகர் கலந்து கொண்டு ஊராட்சியின் நூறு விழுக்காடு மக்கள் சமூக பாதுகாப்பு திட்டத்தில் இணைந்ததை அறிவித்தார். தொடர்ந்து பயனாளிகளுக்கு அதற்கான சான்றிதழையும், வங்கி கணக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

DTP & DESIGN
8144337349

## கடமலைக்குண்டு சுடுகாட்டை மீட்டுத்தர மாவட்ட நிர்வாகம் முன்வர வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை



வருஷநாடு, செப்டம்பர் 07 2021: தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தாலுகா கடமலைக்குண்டு ஊராட்சியில் உள்ள கடமலைக்குண்டு கிராமத்தில் சுமார் 8,500 வாக்காளர்களும் 4500 குடும்பங்களும் 22 சமுதாய மக்களும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு சுடுகாடு கடமலைக்குண்டு கரட்டுப்பட்டி வைகை ஆற்றுப்படுகையில் உள்ளது. தற்போது அதிக மக்கள்தொகை வசிக்கும். இவ்வூருக்கு ஒதுக்கப்பட்ட சுடுகாடு முழு ஆக்கிரமிப்பில் உள்ளதாக இப்பகுதி மக்கள் கூறுகின்றனர் கடந்த பல ஆண்டுகளாக எங்களது மூதாதையர் காலத்தில் இருந்து இந்த சுடுகாட்டை பயன்படுத்தி வருவதாகவும் எவ்வித கல்லறையும் கட்டக்கூடாது. என கட்டுப்பாடு இவ்வூரில் இருப்பதாகவும் வைகை ஆற்றில் வெள்ளம் ஏற்படும் போது சிறுக சிறுக மண் அரிப்பு ஏற்பட்டு வைகை ஆறும் சுடுகாடும் சமநிலையில் உள்ளதாகவும் இதனால் வைகை ஆற்றில் வெள்ளம் ஏற்படும் பொழுது சுடுகாட்டுக்கு உட்புகுந்து கழிவுகளை கொண்டு செல்வதால் வைகை ஆற்றில் உறை கிணறு மூலம் எடுக்கப்படும். குடிநீரில் கலந்து சுகாதாரக்கேடு ஏற்படுகிறது. வைகை ஆறு ஒருபுறம் சுடுகாட்டை தன்வசம் படுத்துக்கொண்டது. மேலும் ஆக்கிரமிப்பாளர்கள் சுடுகாட்டை ஆரம்பித்துள்ளதால் இக்கிராமத்திற்கு போதுமான சுடுகாடு வசதி இல்லை. புதைக்க வேண்டிய இடத்திலேயே மீண்டும் மீண்டும் தோன்றி சடலத்தை புதைக்க வேண்டிய அவல நிலையும் உள்ளது. எனவே கடமலைக்குண்டு ஊராட்சி நிர்வாகமும் மாவட்ட நிர்வாகமும் இணைந்து சுடுகாடு ஆக்கிரமிப்பை அகற்றி தர பொதுமக்கள் மற்றும் அனைத்து சமுதாய நிர்வாகிகளும் கோரிக்கையாக கேட்டுக் கொள்கின்றனர். மாவட்ட ஆட்சியர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து சுடுகாட்டை மீட்டு தர வேண்டும். என அப்பகுதி சமூக ஆர்வலர்களும் கோரிக்கை வைக்கின்றனர்.

## பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள வைகை பறையர் ஆபத்தான முறையில் விளையாட்டு திடல்

வருஷநாடு, செப்டம்பர் 07 2021: தேனி மாவட்டம் ஆண்டிபட்டி தாலுகாவிற்கு உட்பட்ட தேனி மாவட்டத்திலேயே சுற்றுலா தளங்களில் புகழ்பெற்றது இந்த வைகை அணை பூங்கா இந்த பூங்காவை 1960ஆம் ஆண்டில் அன்றைய முதல்வர் கல்வி தந்தை காமராஜ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இதில் எம் ஜி ஆர் நடித்த மாட்டுக்கார வேலன் திரை படமும் இந்த பூங்காவில் எடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மொத்த பராமரிப்பும் பொதுப்பணித்துறையின் கைவசம் உள்ளது இதில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் கட்டணம் செலுத்தி வைகை அணையை சுற்றி பார்த்து மகிழ்கின்றனர். இங்கே சிறுவர்களுக்கான விளையாட்டு திடலும் உள்ளது. சிறுவர்கள் சுற்றி மகிழ்ந்திட ரயில் ஏற்றம் இறக்கம் கலங்கரை விளக்கம் ஊஞ்சல் தேனி மாவட்டத்திற்கு உண்டான வரைபடம் யானை சறுக்கல் உள்ளது. யானை சறுக்கல்



யானை சறுக்கலை எவ்வித பராமரிப்பும் இன்றி இரண்டு அடி அளவில் பள்ளம் உள்ளது சறுக்கி விளையாடும் குழந்தைகள் கை கால் மற்றும் தலையில் காயம் ஏற்படவும் இடுப்பில் எலும்பு முறிவு ஏற்பட வாய்ப்புள்ளதாக சுற்றுலாப்பயணிகள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர். எனவே பொதுப்பணித்துறையினர் பராமரிப்பு செய்ய வேண்டுமெனவும் அவ்வப்போது வைகை அணை பூங்கா ஊழியர்கள் அனுமதியின்றி மது கொண்டு வந்து புதர்களில் மது அருந்தி விட்டு பாட்டிலை அங்கேயே விட்டுச் செல்வதால் சுற்றுலா பயணிகள் முகம் சுளிக்கின்றனர். எனவே இதுபோன்ற நபர்களை கண் கவனிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றனர்.

## ‘ஹலோ மிரர் மெட்ராஸ்‘ செய்தி எதிரொலியாக வருஷநாடு பகுதியில் ஆம்புலன்ஸ் நிறுத்த மாவட்ட நிர்வாகம் தயார்

வருஷநாடு செப்டம்பர் 07 2021: கடமலை மயிலை ஒன்றியம் வருசநாடு ஊராட்சியை மையப்படுத்தி வருஷநாடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராம பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ஏற்கனவே இயக்கப்பட்டு வந்த 108 ஆம்புலன்ஸ் சேவை எவ்வித காரணமும் இன்றி நிறுத்தப்பட்டது. இந்த செய்தியை ஹலோ மிரர் மெட்ராஸ் நாளிதழில் செய்தியாக இடம் பெற்றது. இதனை தொடர்ந்து 108 ஆம்புலன்ஸ் நிர்வாக அலுவலர் வருஷநாடு பகுதி செய்தியாளர் செந்தில் குமாரையும் மக்கள் நண்பன் கிருஷ்ண மூர்த்தியையும் தொடர்பு கொண்டு பேசியபோது வருஷநாடு பகுதிக்கு வழங்கப்பட்ட 108 ஆம்புலன்ஸ் சேவை வருஷநாடு பகுதியில் நிறுத்த மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் உள்ளதாகவும் ஆம்புலன்ஸ் நிறுத்துவதற்கும் ஓட்டுநர் மற்றும் மருத்துவ உதவியாளர்கள் ஓய்வெடுக்க கழிப்பறை யுடன் கூடிய தங்கும் வசதி ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளனர். அவ்வாறு ஏற்படுத்திக்




கொடுத்தால் வாகனங்கள் அங்கேயே இந்த நிலை நிறுத்தப்பட்டு அப்பகுதி மக்கள் நோயாளிகள் கர்ப்பிணி பெண்கள் அனைவரும் பயன்படும் வகையில் ஆம்புலன்ஸ் சேவையை நாங்கள் தொடர்ந்து செயல்படுத்த உள்ளதாகவும் சேவை மனப்பான்மையுடன் இப்பணியைச் செய்ய காத்திருப்பதாகவும் கூறுகின்றனர். எனவே வருஷநாடு ஊராட்சி நிர்வாகம் மேற்கண்ட கோரிக்கையை ஏற்று தங்குமிடம் ஏற்படுத்திக் கொடுக்க இப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர். வருஷநாடு ஊராட்சிகளில் பயன்பாட்டில் இல்லாத இ சேவை மையம் நூலகம் ஆவின் குளிரூட்டும் நிலையம் அனைத்தும் மக்கள் பயன்பாடின்றி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. சமூக ஆர்வலர்கள் கூறுகையில் இடம் ஒதுக்கீடு செய்யும் வரை வருஷநாடு ஊராட்சி நிர்வாகம் தனியாரிடம் குறைந்த வாடகையில் வீடு ஏற்படுத்திக் கொடுத்தாள் வருஷநாடு மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமப்புற மக்கள் பயன்பெறுவார்கள். இதன் சாதனை ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் நிர்வாகத்திற்கு சாரும் எனவும் கூறுகின்றனர். நிறைவேற்றுவார்களா வருஷநாடு ஊராட்சி நிர்வாகம்.

## தமிழக அரசின் உத்தரவின்படி நோய்தடுப்பு விதிமுறைகளை பின்பற்றி 9 முதல் 12 வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு பள்ளி வகுப்புகள் துவங்கின

நாகர்கோவில், செப்டம்பர் 07 2021: தமிழக அரசின் உத்தரவின்படி நோய்தடுப்பு விதிமுறைகளை பின்பற்றி 9 வகுப்பு முதல் 12 வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு பள்ளி வகுப்புகள் துவங்கின





மாநகராட்சி ஆணையர் அவர்களின் உத்தரவின்படி நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள நோய் தடுப்பு விதிமுறைகள் மாநகர் நல அலுவலர் நேரில் சென்று ஆய்வு செய்தார்கள்.

மேலும் கல்லூரிகளில் மாணவிகள் மற்றும் அங்கு பணியாற்றிய ஊழியர்களுக்கு நடைபெற்று வரும் சிறப்பு தடுப்பூசி முகாமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

பொது மக்கள் சமூக நலனை கருத்தில் கொண்டு பொது இடங்களுக்கு செல்லும் பொழுது முகக் கவசங்கள் அணிவதையும் சமூக இடைவெளியை கடைபிடிப்பதையும் உறுதிசெய்துகொள்ள அறிவுறுத்தப்படுகிறார்.

## கிரிக்கெட் போட்டியில் முதலிடம் பெற்று வருசநாட்டிற்கு பெருமை சேர்த்த மாணவன்

வருஷநாடு, செப்டம்பர் 07 2021: தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டம் கடமலை மயிலை ஒன்றியம் வருஷநாடு ஊராட்சியில் முன்னாள் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் சரவணன் அவரது மகன் கலைச்செல்வன் மற்றும் மேட்டுப்பாளையம் கிரிக்கெட் அகடாமி சார்பாக பஞ்சாபில் நடந்த 5வது மாநில அளவில் 2021 கிரிக்கெட் போட்டியில் தமிழ்நாடு கிரிக்கெட் அணியும் பஞ்சாப் கிரிக்கெட் அணியும் மோதியதில் முதலிடத்தை மேட்டுப்பாளையம் கிரிகெட் அகடமி அணியில் விளையாடி வருஷநாடு ஊராட்சியை சேர்ந்த கலைச்செல்வன் முதல் பரிசாக வெள்ளிப் பதக்கத்தையும் மற்றும் கேடயத்தையும் பெற்று மேட்டுப்பாளையம் கிரிக்கெட் அகாடமி



குழுவுக்கும் வருஷநாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளார். இவரை வாழ்த்த 6383680098 என்ற எண்ணில் வாழ்த்து தெரிவிக்கலாம்.

## கடமலை மயிலை ஒன்றியத்தில் மீண்டும் ஆவின் பால் குளிரூட்டும் நிலையம் பயன்பாட்டிற்கு வருமா பொதுமக்கள் கேள்வி

வருஷநாடு செப்டம்பர் 07 2021: கடமலை மயிலை ஒன்றியத்தில் 2011ஆம் ஆண்டு திமுக ஆட்சியில் வருசநாடு கடமலைக்குண்டு முறுக்கு கோடை வாய்க்கால் பாறை ஆகிய 6 இடங்களில் ஆவின் பால் குளிரூட்டும் நிலையம் கட்டப்பட்டு பால் உற்பத்தியாளர்கள் பயன்பாட்டிற்கு வந்தது. இதனால் இப்பகுதி கால்நடை வளர்ப்போருக்கு போதுமான வருமானம் கிடைத்ததாலும் அவர்கள் சிரமத்தை குறைக்கும் வகையில் தொடங்கப்பட்ட இந்த குளிரூட்டும் நிலையம் எவ்வித காரணமும் இன்றி நிறுத்தப்பட்டது. இதனால் பால் உற்பத்தியாளர்கள்



மிகுந்த வேதனையில் உள்ளனர். கட்டிடம் தனிநபரின் ஒப்புதல் பெற்று அன்றைய அரசு கட்டியது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது கட்டிடத்துக்குள் இருந்த கணினி குளிரூட்டும் டேங்கர் அளவு நிர்ணயம் செய்யும் கருவி மற்றும் அனைத்து தளவாட சாமான்கள் எடுக்கப்பட்டு வெறும் கட்டடமாக பயன்பாடற்ற நிலையில் காட்சி அளித்து வருகிறது. மீண்டும் கடமலை மயிலை ஒன்றியத்தில் ஆவின் பால் குளிரூட்டும் நிலையம் பயன்பாட்டிற்கு வருமா என்று இப்பகுதி பொதுமக்களும் பால் உற்பத்தியாளர்களும் கேட்டுக் கொள்கின்றனர்.